IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | OS. No. | | 112/2024 |
| | | P/W's | : | PW1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | குப்பம்மாள் @ சுப்புலெட்சுமி | CASTE | : | |
| W/O | ராஜேந்திரன் | RELIGION | : | இந்து |
| VILLAGE | இடையப்பட்டி | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | 55 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 27.10.2025**

**<u>1 ம் பிரதிவாதி குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. வழக்கின் அடமான பத்திரத்தின்படி வருடம்தோறும் மாசி மாதம் 8 மூட்டை நெல்லை வட்டியாக தரவேண்டும் என்ற நிபந்தனை உள்ள விவரம் எனக்குத்தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது, அப்போது இளவராக இருந்தேன். மேற்படி வட்டி கொடுத்ததற்காக ரசீது எதுவும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வட்டி கொடுக்காமலிருந்தால் வட்டியையும் அசலையும் எனது நிலத்தின் மூலமாகவும் வேறு இதர சொத்துக்கள் மூலமாகவும் வசூலிக்கப்படலாம் என்று நிபந்தனை உள்ளது என்றால் எனக்குத்தெரியாது.

2. ஈடுகடன் பத்திரத்தின்படி அது எழுதப்பட்ட தேதி சொத்து மதிப்பு ரூபாய் 5000 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. மேற்படி பத்திரத்தின் படி கடன்வாங்கிய 3 வருடத்தில் கடனை திருப்பி செலுத்த வேண்டும்என்று நிபந்தனை உள்ளது என்றால் எனக்குத்தெரியாது. வா.சா.ஆ.6 வில்லங்கசான்றிதழில் 2 வது பத்திரமாக வாசுகிஅம்மாளுக்கு அடமானம் கொடுக்கப்பட்டதாக உள்ளது என்றால் தெரியாது. வில்லங்க சான்றிதழ்படி 3, 4 பத்திரங்களாக முருகன், ரவி ஆகியோரிடமிருந்து அடமானம் வைத்த விவரம் தெரியும். மேற்படி அடமானங்களை வில்லங்க சான்றிதழ்படி 5, 6 பத்திரங்களில் திருப்பியுள்ளோம்.

3. வில்லங்க சான்றிதழ் படி 7, 8 பத்திரங்களில் ஹரிகிருஷ்ணன், வன்னியராஜனுக்கு அடமானம் வைத்துள்ளது என்றால் எனக்குத்தெரியாது. வழக்குச்சொத்து சர்வே நம்பர் சம்பந்தமாக 2020 வரை பல பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். வழக்கில் 1 ம் பிரதிவாதியின் அம்மா மற்றும் ஈடுகடன் பெற்றவரின் மனைவி ஆகியோர்

வழக்கிற்கு அத்தியாவசிய நபர்கள் என்றாலும் அவர்களை வழக்கில் சேர்க்கவில்லை என்றாலும் சரியல்ல.

4. வழக்கின் வா.சா.ஆ.1 அடமான பத்திரம் சம்பந்தமாக 1982 லிருந்து 2021 வரை எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தின்படி வட்டியுடன் அசல் திருப்பி தரவில்லை என்றாலும் அதனால்தான் பத்திரத்தை திருப்பவில்லை என்றாலும் பத்திரத்தை கடைசி பக்கத்தில் பதிவு செய்யும்போது வழக்கமாக கையெழுத்து செய்த பக்கத்தில் தவறாக நிரப்பிக்கொண்டேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1 பத்திரத்தில் கடைசி பக்கத்தில் எனது உறவினர்களை சாட்சிகளாக கையெழுத்து செய்ய வைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. வா.சா.ஆ.1 பத்திரத்தின்படி எந்த விவரமும் தெரியாமல் பணம் கொடுத்ததாக பொய்யாக வழக்குப்போட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

**2, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. வா.சா.ஆ.1 பத்திரத்தின்படி எனது அப்பா வைத்த அடமானம் இதுவரை திருப்பாமல் உள்ளதால் வழக்குச்சொத்தை கிரையம் கொடுக்கமுடியாது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு எதிராக கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/- M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.